பக்கங்கள் எட்டு

விலைரூபா 5·00

# வலம்புரி
VALAMPURI

உள்ளே →

க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
விஞ்ஞானம் பகுதி I
ஜோதிட பலன்

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 25 ஞாயிற்றுக்கிழமை (10-9-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 265

## ★ யாழ். குடாநாட்டு வான்பரப்பில்

# போர்விமானங்களின் தாக்குதல்கள்

# பொதுமக்கள் மத்தியில் பீதி; அச்சம்!

## புறநகர்ப்பகுதி எங்கும் புகைமண்டலம்

(யாழ், அலுவலக நிருபர்)

**யாழ். குகாநாட்டின் மையப் பகுதியான யாழ் நகரப் பகுதிகளில் நேற்று பகல் ஸ்ரீலங்கா விமானப் படையின் மிக் ரக மற்றும் கிபிர் குண்டுவீச்சு விமானங்களும் இஸ்ரேல் தயாரிப்பான இராட்சத ஹெலிகளும் விமான எதிர்ப்புக் குண்டுகளை வீசித் தள்ளியதில் யாழ் நகரின் புறநிலப் பகுதிகள் எங்கும் ஒரே புகைமண்டலமாகக் காட்சி அளித்தவண்ணம் இருந்தது. இதனால் மக்கள் பெரும் பரபரப்பிற்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

நேற்றுப் பகல் மண்டை தீவுக் கடற்கரையோரமாக இருந்து அடுத்து அடுத்து வந்த இரண்டு இராட்சதக் ஹெலிகள் தம்மிடமுள்ள விமான எதிர்ப்புப் பீரங்கிக் குண்டுகளை வீசியதனால் பண்ணை ரெலிக்கொம் நிறுவனம் மற்றும் கோட்டை முனீஸ்வரன் ஆலயம், அிம்சா மூர்த்தி காதிந்சிலை மணிக்கூட்டு வீதி ஆகிய பகுதிகள் எங்கும் ஒரே புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும்பர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துத் தமிழர் நால்வர் ஜேர்மனில் சாகும்வரை உண்ணாவிரதம்

(இலண்டன்)

ஜேர்மனியிலிருந்து தம்மை இலங்கைக்கு நாடு கடத்த வேண்டாமெனக்கோரி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு தமிழர். ஜேர்மனியின் மோஸ்ட் நகரிலுள்ள சிறைச்சாலையில சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிதுள்ளனர்;

கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இவ் உண்ணா விரதப் போராட் (8-ம் பக்கம் பார்க்க)

# யுத்தவிமானங்களின்பேரிரைச்சலால் இருதய நோயாளிகள் பெரும் பாதிப்பு

## யாழ். தளபதிக்கு சங்கரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணல்)

யாழ்நகர வான்பரப்பை ஊடறுத்து செல்லும் யுத்த விமானங்களின் பேரிரைச்சல் யாழ்நகர அப்பாவி பொதுமக்களை கிலிகொள்ளச் செய்வதுடன் சொல்லொணா துன்பதுயரங்களையும் கொடுக்கிறது.

எனவே இத்தகைய யுத்த விமானங்களின் நடமாட்டங்கள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறுதமிழர்விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி யாழ்குடாநாட்டுஇராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர வேண்டுகோளில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் வேண்டுகோளில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

பேரிரைச்சலுடன் யுத்த விமானங்கள் யாழ்நகரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் புலிகள் தாக்குதல் ஒருவர்பலி, இருவர்காயம்

(வவுனியா)

வவுனியா, மன்னார் வீதி முருங்கனில் கடந்த வெள்ளிக கிழமை இரவு புலிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டார் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

நள்ளிரவுநேரம் இத்தாக்குதல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சிறைக் கைதிகள் வாக்களிக்க தேர்தல் சட்டத்தில் இடமில்லை

### தேர்தல்ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கு

படமாட்டாது எனத்தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க நேற்று அறிவித்துள்ளார்.

# சகோதரி சந்திரிகாவின் செயலால்

டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்

திஸநாயக்க நேற்று அறிவித்துள்ளார்.

(8ஆம்பக்கம் பார்க்க)

# சகோதரி சந்திரிகாவின் செயலால் கல்லறையிலுள்ள தந்தை அதிர்ச்சி

## பண்டாவின் தனயன் அனுரா ஆதங்கம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் வளர்ச்சிக்காகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்த கே. பி. ரத்னாயக்கா, லக்ஸ்மன் ஜெயக்கொடி ஆகியோருக்கு தேசியப்பட்டியலில் இடம் கொடுக்காத எனது சகோதரி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஊழலைப் பிரகடனப்படுத்திய வரத ராஜப்பெருமாளுக்கு தேசியப்பட்டியலில் இடம்கொடுத்துள்ளார். இதனை கல்லறையிலுள்ள எனது தந்தை அமரர் பண்டாரநாயக்கா அறிந்தால் அதிர்ச்சி அடைவார். இவ்வாறு அனுரா பண்டாரநாயக்கா நேற்றுத் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தகவல் தொடர்பு சாதனம் மூலம் பிரச்சாரம்; நேரம் ஒதுக்கப்பட்டது

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் தமது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும், கருத்துக்கள், கொள்கைகளை வெளிப்படுத்தவும் வானொலி, தொலைக்காட்சியைப் பயன்படுத்தும் நேர அளவு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒரு தேர்தல் மாவட்டத்தில் மட்டும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் சுதந்திரமாக நடைபெற ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

## காங்கிரஸ் செயலர் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெற வேண்டுமானால் தமிழ்குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவேண்டுமென்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ந.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ரணில் தேர்தலில் வென்றால் பிரபாவுடன் ஒப்பந்தம் செய்வாரா?

## ஜனாதிபதி சந்திரிகா கேள்வி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வழங்கும் உறுதி மொழிகளை நிறைவேற்ற 93 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை; அதனை எங்கிருந்து அவர் பெறப்போகிறார்? இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் விக்கிரம சிங்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் வியாங்கொடவில் நடைபெற்ற போதே அக் கூட்டத்தில் ஜனாதிபதி இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்க ஊழியர்களுக்கு இரண்டாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்போவதாகவும் சமுர்த்தித் தொகையை உயர்த்தப் போவதாகவும் கூறிவரும் ரணில் விக்கிரம

(8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அடையாள அட்டை கண்டெடுப்பு

சரசாலை தெற்கை நிரந்தர முகவரியாகத் கொண்ட செல்லப்பா கந்தையா என்பவரின் விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(சு)


இசைச் செல்வர் S. R. தர்ஷனன் கவிஞர் துரையர் வழங்கிய

## அம்மன் கவசம் ஒலிநாடா வெளியீட்டு விழா

இடம்: சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தானம் கல்யாண மண்டபம்.

காலம்: 10-09-2000 ஞாயிறு மாலை 2-30 மணி.

தலைவர்: செஞ்சொற்கொண்டல் திரு. ஆறு. திருமுருகன்.

பிரதம விருந்தினர் உரை: பேராசிரியர் செ. பாலச்சந்திரன் கலைப்பீடாதிபதி

வெளியீட்டுரை: திரு. N. V. M. நவரெட்ணம் M. Phil தலைவர் இசைத்துறை

அமைப்புக் குழு.

(சி-784)



இலங்கை மின்சார சபை

## மின் பிறப்பாக்கிகள் வாடகைக்கு வழங்குவதற்கான கூறுவிலைகள்

இலங்கை மின்சார சபை யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசர தேவைகளுக்காக மின் பிறப்பாக்கிகளை நாளாந்த வாடகை அடிப்படையில் பாவனைக்கு பெற்றுக் கொள்ள தீர்மானித்துள்ளது.

கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கு உரிய கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. 25 கேவிஏ க்கு மேற்பட்ட உற்பத்தித் திறனுடையவை. (உற்பத்தித்திறன் அளவை குறிப்பிடவும்)
2. மிகவும் சீராக வேலை செய்யும் நிலையில் இருக்க வேண்டும். தொடர்ச்சியாக 12 மணித்தியாலங்களுக்கு குறையாமல் இயங்க வேண்டும்.
3. இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் காரியாலயத்தில் ஒப்படைத்து திரும்ப கொண்டு செல்லும் செலவை உரிமையாளரே ஏற்க வேண்டும்.
4. மின் பிறப்பாக்கியுடன் இயக்குநர் ஒருவர் சமுகமளிக்க வேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக வாடகைக்கு தர விரும்பும் மின் பிறப்பாக்கி உரிமையாளர்கள் டீசல் செலவு உட்பட நாளொன்றுக்கு கேட்கும் வாடகை, டீசல் இல்லாமல் நாளொன்றுக்கு கேட்கும் வாடகை என்பவற்றை 12-09-2000 திகதிக்குள் எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்/நேரடியாக எனது காரியாலயத்திலும் ஒப்படைக்கலாம். கடித வெளியுறையின்


# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர் மாதம் 9-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

### சங்கானை

| | |
|---|---|
| 144045 ஏ | 144045 பி |
| 144045 சி | 150559 ஏ |
| 150559 பி | 150559 சி |
| 150559 டி | 151821 ஏ |
| 151822 ஏ | 155173 ஏ |
| 155192 ஏ | 155192 பி |
| 155384 ஏ | 155384 பி |
| 155384 சி | 156010 ஏ |
| 156034 | 156056 ஏ |
| 156 56 பி | 156077 ஏ |
| 156077 பி | 157740 ஏ |
| 157740 பி | 157792 ஏ |
| 157808 ஏ | 157968 ஏ |
| 158524 ஏ | 158525 ஏ |
| 158525 பி | 158544 ஏ |
| 158544 பி | 158550 ஏ |
| 1586 0 ஏ | 158682 பி |
| 158697 ஏ | 158697 பி |
| 158697 சி | 158703 ஏ |
| 158703 பி | 158703 சி |
| 158703 டி | 158703 ஈ |
| 158727 ஏ | 158774 ஏ |
| 158798 ஏ | 158798 பி |
| 158798 சி | 158830 ஏ |
| 158831 ஏ | 158831 பி |
| 158831 சி | 158843 ஏ |
| 158843 பி | 158843 சி |
| 158905 ஏ | 158922 ஏ |
| 158922 பி | 158926 ஏ |
| 158926 பி | 158950 ஏ |
| 160995 ஏ | 160695 பி |
| 160716 ஏ | 160855 ஏ |
| 160866 ஏ | 180866 பி |


## ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]

அருண்பாண்டி விஜயசாந்தி நடித்த

கிரன் I-P-S

காட்சி நேரம்

மு. ப. 10-30 (ப.நே)

சிவாஜி நடித்த

தெய்வமகன்

[காட்சி நேரம்]

பி. ப. 2.00 [ப.நே)

[இ 688]

## கஜன்

திரை


### நல்லூர்

| | |
|---|---|
| 123501 ஏ | 142118 ஏ |
| 146349 ஏ | 146349 பி |
| 150316 ஏ | 150316 பி |
| 150316 சி | 152199 ஏ |
| 152199 பி | 153368 ஏ |
| 153358 பி | 157714 ஏ |
| 157798 ஏ | 157798 பி |
| 157798 சி | 157915 ஏ |
| 157915 பி | 157915 சி |
| 157915 டி | 157915 ஈ |
| 157976 ஏ | 157976 பி |
| 158510 ஏ | 158511 ஏ |
| 158511 பி | 158520 ஏ |
| 158530 ஏ | 158554 ஏ |
| 158554 ஏ | 158554 சி |
| 158554 டி | 158556 ஏ |
| 158556 பி | 158557 ஏ |
| 158557 பி | 158589 ஏ |
| 158589 பி | 158589 சி |
| 158589 டி | 158628 ஏ |
| 158675 ஏ | 158675 பி |
| 158675 சி | 158675 டி |
| 158678 ஏ | 158682 ஏ |
| 158806 ஏ | 158806 பி |
| 158806 சி | 158850 ஏ |
| 158850 பி | 158884 ஏ |
| 158884 பி | 158895 ஏ |
| 158895 பி | 158895 சி |
| 158895 டி | 158895 ஈ |
| 158895 எவ் | 158980 பி |
| 158980 சி | 158983 பி |
| 169721 ஏ | 160764 ஏ |
| 160764 பி | 160764 சி |
| 160829 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 123500 ஏ | 123500 பி |
| 123500 சி | 150712 ஏ |
| 150712 பி | 150795 ஏ |
| 150795 பி | 151887 ஏ |
| 151887 பி | 151887 சி |
| 151887 டி | 151887 ஈ |
| 151887 எவ் | 151997 ஏ |
| 151997 பி | 151997 சி |
| 151997 டி | 151997 ஈ |
| 151997 எவ் | 152044 ஏ |
| 152044 பி | 157723 ஏ |
| 157787 ஏ | 157787 பி |
| 157787 சி | 157787 டி |
| 157787 ஈ | 157902 ஏ |
| 157916 பி | 157929 ஏ |
| 167929 பி | 157929 சி |
| 157929 டி | 157929 ஈ |
| 157971 ஏ | 157971 பி |
| 157971 சி | 157971 டி |
| 157971 ஈ | 158529 ஏ |
| 158542 ஏ | 158542 பி |
| 158547 ஏ | 158547 பி |
| | 158564 ஏ |
| 158564 பி | 158570 ஏ |
| 157570 பி | 158570 சி |
| 158578 ஏ | 158581 ஏ |
| 158594 ஏ | 158643 ஏ |
| 158643 பி | 158660 ஏ |
| 158660 பி | 158666 ஏ |
| 158666 பி | 158667 ஏ |
| 158762 ஏ | 158771 ஏ |
| 158771 பி | 158771 சி |
| 158775 ஏ | 158775 பி |
| 158776 ஏ | 158776 பி |
| 158776 சி | 158776 டி |
| 158776 ஈ | 158829 ஏ |
| 158829 பி | 158829 சி |
| 158839 ஏ | 158839 பி |
| 158839 சி | 158851 பி |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 155282 ஏ | 155282 பி |
| 155282 சி | 158577 ஏ |
| 158577 பி | 158577 சி |
| 158577 டி | 158684 ஏ |
| 158584 பி | 158584 சி |
| 158584 டி | 158584 ஈ |
| 158590 ஏ | 158590 பி |
| 158590 சி | 158590 டி |
| 158590 ஈ | 158732 ஏ |
| 158927 ஏ | 160841 ஏ |
| 160842 ஏ | |

### உடுவில்

| | |
|---|---|
| 152186 ஏ | 152186 பி |
| 152186 சி | 152230 ஏ |
| 155139 ஏ | 155139 பி |
| 155329 ஏ | 155402 ஏ |
| 155402 பி | 155464 ஏ |
| 155464 பி | 155464 சி |
| 155464 டி | 156034 ஏ |
| 156034 பி | 156034 சி |
| 156072 ஏ | 157895 ஏ |
| 157895 பி | 157896 ஏ |
| 157896 சி | 157896 பி |
| 157916 ஏ | 157916 பி |
| 157926 ஏ | 158492 ஏ |
| 158494 ஏ | 158494 பி |
| 158505 ஏ | 158505 பி |
| 158505 சி | 158539 ஏ |
| 158539 பி | 158539 சி |
| 158559 ஏ | 158559 பி |
| 158559 சி | 158559 டி |
| 158560 ஏ | 158560 பி |
| 158560 சி | 158578 பி |
| 158591 ஏ | 158591 பி |
| 158592 ஏ | |
| 158594 பி | 158595 ஏ |
| 158631 ஏ | 158631 பி |
| 158631 சி | 158631 டி |
| 158631 ஈ | |
| 158677 ஏ | 158677 பி |
| 158751 ஏ | 158752 ஏ |
| 158754 ஏ | 158754 பி |
| 158754 சி | 158779 ஏ |
| 158779 பி | 158802 ஏ |
| 158802 பி | 158802 சி |
| 158803 டி | 158851 ஏ |
| 158939 ஏ | 158980 ஏ |
| 160557 ஏ | 160557 பி |
| 160619 ஏ | 160619 பி |
| 160678 ஏ | 160678 பி |
| 160847 ஏ | 160849 ஏ |
| 160849 பி | 160849 சி |
| 160859 ஏ | 160861 ஏ |
| 160861 பி | 160861 சி |
| 160861 டி | 160889 ஏ |
| 160889 பி | 160889 சி |
| 160891 ஏ | 160891 பி |

## இன்று விளையாட்டுப் போட்டி

(நல்லூர்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்

மேற்படி நிபந்தனைகளுக்கு அமைவாக வாடகைக்கு தர விரும்பும் மின் பிறப்பாக்கி உரிமையாளர்கள் டீசல் செலவு உட்பட நாளொன்றுக்கு கேட்கும் வாடகை, டீசல் இல்லாமல் நாளொன்றுக்கு கேட்கும் வாடகை என்பவற்றை 12-09-2000 திகதிக்குள் எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்/நேரடியாக எனது காரியாலயத்திலும் ஒப்படைக்கலாம். கடித வெளியுறையின் இடது பக்கத்தில் ''மின் பிறப்பாக்கி'' என்று குறிப்பிடவும்.

பிரதிப் பொது முகாமையாளர்
(வடக்கு)

பி.பொ.மு(வ) அலுவலகம்,
இ.மி.சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை''
(கி/782)

# கஜன்

திரை

ஊர்காவற்றுறை

கார்த்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்

## கிழக்கு வாசல்

காட்சி நேரம்
பி.ப 8.30 மணி

(கி-652)

| | |
|---|---|
| 158762 ஏ | 158771 ஏ |
| 158771 பி | 158771 சி |
| 158775 ஏ | 158775 பி |
| 158776 ஏ | 158776 பி |
| 158776 சி | 158776 டி |
| 158776 ஈ | 158829 ஏ |
| 158829 பி | 158829 சி |
| 158839 ஏ | 158839 பி |
| 158839 சி | 158851 பி |
| 158865 ஏ | 158865 பி |
| 158867 ஏ | 158867 பி |
| 158868 ஏ | 158868 பி |
| 158942 ஏ | 158942 பி |
| 158942 சி | 158945 டி |
| 158983 ஏ | 160614 ஏ |
| 160614 பி | 160620 ஏ |
| 160620 பி | 160701 ஏ |
| 160704 ஏ | 160704 பி |
| 160717 ஏ | 160805 ஏ |
| 160805 பி | 160805 சி |
| 160810 ஏ | 160831 ஏ |
| 160831 பி | 160863 ஏ |
| 160863 பி | |

(நல்லூர்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை. கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாளய மைதானத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அ. ஆனந்தமூர்த்தியின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டு விழாவில் நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் செ. செல்வரத்தினம் உட்பட பலர் கலந்து கொள்வர்.

(-103)

# சுயேச்சைக்குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)

யுத்தத்தை நிறுத்துவோம்!
உரிமையை வென்றெடுப்போம்!
நாங்கள் என்றுமே உங்களுடன்
நீங்கள் என்றுமே எங்களுடன்
உங்கள் வாக்குகள் எங்கள் சின்னத்திற்கே



[1714]

# பொ.ஐ.ஐ.மு அரசியலமைப்பு ஆலோசனைகள்

# இனப்பிரச்சினை தீர்விற்கான ஓர் அடிப்படையே

## ஈ.பி.ஆர்.எல்.எவ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொ.ஐ.ஐ.மு. அரசினால் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அது தமிழ் மக்களின் அபிலாசைகளை பூரணமாக உள்ளடக்கியதாக இல்லை. இருப்பினும் அதனை இனப்பிரச்சினை தீர்வுக்கான ஒரு அடிப்படையாகக் கொள்ளலாம் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தினர் விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; எந்த ஒரு தீர்வும் இலட்சிய பூர்வமானதாக முழு நிறைவானதாக இருப்பதில்லை. அதற்கென்று ஆரம்பம் ஒன்றிருக்கும். சந்திரிகா அவர்களின் தீர்வு யோசனைகளில் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் பிரதேசத் தொடர்ச்சி உறுதிப்படுத்தப்படவில்லை.

சில அதிகாரம் சில குறைபாடுகளைக் கொண்டது.

வடக்கு - கிழக்கில் வாழும் முஸ்லிம், சிங்கள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மாத்திரம் குறித்துவைக்கப் பட்டுள்ளது.

இந்தக் குறைபாடுகள், பேச்சு வார்த்தைகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் மூலம் நிவர்த்திக்கப்படக்கூடியவை. நாம் ஒருமித்து முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை.

மற்றப்படி இத் தீர்வு யோசனைகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான அடிப்படையே என்று வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம்.

இந்தத் தீர்வு யோசனைகளை அமுல்படுத்துவதற்கு எதிராக பௌத்த மகா சங்கங்களும், ஐ.தே. கவும், ஜே.வி. பியும், சிஹள உறுமய, போன்ற இனவாதக் குழுக்களும் வரிந்து கட்டிக் கொண்டு எதிர்ப்பைக் கட்டவிழ்த்து விட்டன.

என்ன சமாளிப்புக் கதைகளைச் சொன்னாலும் இந்த எதிர்ப்புக் கிளர்ச்சி தமிழ் மக்களுக்கு எதுவும் வழங்கப்படக் கூடாது என்ற பச்சை இனவாதமே. அந்த வகையில் இவ்வளவு எதிர்ப்புகளுக்கு மத்தியில் இத்தீர்வு யோசனைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் மூலம் சந்திரிகா துணிச்சலாகவும், முற்போக்காகவும் நடந்து கொண்டார்.

எனவே எதிர்காலத்தில் இப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய துணிச்சலும், திராணியும் இன்றுள்ள தலைவர்களுள் ஒரே ஒரு சிங்களத் தலைவர் சந்திரிகா அவர்களுக்கே இருக்கின்றது.

அந்த அடிப்படையில்தான் நாம் தீர்வு யோசலனகளை ஆதரிக்கின்றோம்.

இல்லாமல் உங்களை ஏமாற்றுவதற்காக நாம் உணர்ச்சிகரமான கோஷங்களைஇங்கு எழுப்பவில்லை. பொய்யாக எதனையும் கூறவில்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் சந்திரிகா அவர்கள் பாராளுமன்றத்தில் முன் வைத்ததீர்வு யோசனைகளை மேலும் முன்னேற்ற கரமான நிலைக்கு வளர்த்தெடுப்பதும் காலங் கடத்தாமல் துரிதமாக தீர்வு அமுலுக்கு வர வேண்டியதும் அவசியம். யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்கள் நிம்மதியாக வாழும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். என்பதே எமது பேரவா.

ஒரு தடவை இடப்பெயர்வதென்பது வேறு. ஆனால் இங்கு நாளாந்தம் இடம்பெயாவு நடைபெறுகின்றது. எத்தனை மணித்தியாலம் வீட்டில்இருப்போம்எத்தனை மணித்தியாலம் கோயிலிலோ, தேவாலயத்திலோ தஞ்சம் அடைந்திருப்போம் என்று சொல்லமுடியாத நிலை. உயிரைக் கையில் பிடுத்துத்திரியும் இந்த வாழ்வு மூற்றுப் பெற வேண்டும். ஒரு பயமின்றிய ஜனநாயக வாழ்வு வேண்டும்.

அதற்காக நாம் எமது சக்தி வளங்கள் அத்தனையையும் பாவித்து முயற்சிப்போம்.

வெளியுலகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு எரிச்சலும், அவமானமும் நிறைந்த போக்குவரத்தைச் சிராக்க முயற்சிகள் மேற்கொள்வோம்.

எமது மக்களின் சமூக பொருளாதார கலாச்சார வாழ்வை மேம்படுத்துவதற்கான எத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ளப் பாடுபடுவோம்.

குறிப்பாக தென்மராட்சியிலிருந்து இன்று பல்வேறு இன்னல்கள், துன்பங்கள் மத்தியில் வலிகாமத்திலும் வடமராட்சியிலும், வாழும் மக்களின் உடனடித்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், நீண்ட காலத்தில் அவர்கள் தமது சொந்த இருப்பிடங்களில் வாழ்தற்கும் வழி சமைப்போம்.

ஆனால் எமக்குள்ள வளங்களோ அதிகாரங்களோ மட்டுப்படுத்தப்பட்டவை எம்மிடம் அறிஞர்களும், சமூக அக்கறை கொண்டோரும், தொழில் நுட்பவியலாளர்களும் இருககிறார்கள்.

ஆனால் அதிகாரங்களும் வளங்களும் இல்லை, இருக்கும் வளங்களில் நாம் எம்மால் இயலக்கூடியதை மக்களுக்கும் செய்திருக்கிறோம். செய்து வருகிறோம்.

நாம் காரியமாற்றக்கூடியவர்கள் என்பதற்கு ஆதாரம் வடக்கு-கிழக்கை இணைத்து திருமலையை தலை நகராக்கியதுதான். இன்று வரை அது அப்படித்தான் இருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் வேலையற்ற பட்டதாரிகள் இல்லை என்ற நிலையை 1988, 89 காலப்பகுதியில் நாம் செய்து காட்டினோம்.

பலகோடிக்கணக்கான ரூபாய்கள் யுத்தத்திற்கு செலவழிக்கப்படும் போது அகதி முகாம்களிலும், இடம்பெயர்ந்து வாழும் எமது மக்களுக்கு உதவி செய்ய முடியாது என்று கூறுவதற்கோ அல்லது சில ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர வேலை, பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புஎன்பனதீர்வு காணப்படமுடியாத விடயங்களில்லை. இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சீருடை அணிந்த நிலையிலேயே இனிமேல் பாதுகாப்பு கடமை

### பொலிஸ் அவசர பணிப்பு

[கொழும்பு]

அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இனிமேல் சீருடையிலேயே பாதுகாப்பு வழங்கும் கடமையில் ஈடுபட வேண்டும் என்று பொலிஸ் இணைக்களம் நேற்று அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பொலிஸ் திணைக்களம் இது தொடர்பாக மேலும் அறிவித்திருப்பதாவது, தேர்தல் காலங்களில் வன்முறையில் ஈடுபடுவதில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே சீருடையில்பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் கடமையாற்ற வேண்டும்என்றும் கேட்டுள்ளது. [க]

### யாழ். நகரப் பகுதியில்

## தேர்தல் “கட்அவுட்”கள் நேற்று அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்ததேர்தல் ‘‘கட்அவுட்’’ மற்றும் பதாகைகள் நேற்று பொலிஸாரினால் அகற்றப்பட்டது.

இவற்றை அகற்றுவதற்காக வழங்கப்பட்ட காலஅவகாசம் ஏற்கனவே முடிவுற்றதை அடுத்தே இவ் அகற்றும் வேளைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வீட்டு மதில்களிலும் தனியார் வர்த்தக நிறுவனங்களிலும், பொது இடங்களிலும் பொறிக்கப்பட்ட பிரச்சார சின்னங்கள் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் என்பன அகற்றப்படவில்லை.

சில இடங்களில் மாத்திரம் சுவர்களில் பொறிக்கப்பட்ட பிரச்சார சின்னங்கள் மீது ஓயில் மற்றும் மைதெளித்து அவற்றை மறைக்க முற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. (உ-3.12.59)

### யாழ்.மாவட்டத்தில்

## தேர்தல் பிரச்சாரம் சுறுசுறுப்பு தீவுப் பகுதியில் ஆர்வம் இல்லையாம்

தேர்தல் பிரச்சாரத்தைமிக கடுமையாகவே முடுக்கி விட்டுள்ள, யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும்சுயேட்சைக்குழுக்கள் தீவுப் பகுதியில் தமது கண்ணோட்டத்தை அவ்வளவாக செலுத்தவில்லை என தெரியவந்துள்ளது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் போட்டி போட்டு பிரச்சார மற்றும் சுவரொட்டும் பணியில் இவை ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

இருந்த போதிலும் தீவுப் பகுதியில் ஒரேயொரு தமிழ் கட்சி மாத்திரமே தனது தேர்தல் தொடர்பான பிரச்சார வேலைகளை தொடங்கியிருப்பதாக தெரியவருகிறது.

இதே சமயம், தேர்தல் பிரச்சாரம் நடத்தினாலும் நடத்தாவிட்டாலும் மக்கள் சேவையை நோக்கமாகக் கொண்ட உண்மைத்தன்மை வாய்ந்த கட்சி எதுவோ அதனையே நாம் ஆதரிப்போம் என, அப்பகுதி பொது மக்கள் தமது கருத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். (உ-75)

## சிறுவீதிகள் திருத்தம்

(கல்வியங்காடு)

நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருந்த சிறு வீதிகளின் திருத்தப்பணிகள் தற்போது துரித கதியில் நடைபெறுகின்றன,

இத்திருத்தப்பணியின் போது யமுனாவீதி, சங்கிலியன்வீதிதிருநெல்வேலிகிழக்கு இராமலிங்கம்வீதி, திருநெல்வேலி சிவன் அம்மன்வீதி.இராமநாதன் வீதி ஆடியபாதம் வீதி என்பனதிருத்தப்படுகின்றன. (த-54)

## இராசி பலன்

10/09/2000
(ஆவணி 25, ஞாயிறு)
துவாதசி
மு இ 9 20 வரை
திருவோணம் முழுவதும்
இராகுகாலம்
4.33 - 6.03
சுபநேரம்
9.03 - 10.33
ஆவணி ஓணம்

**மேடம்**
தொழில் முயற்சியால் மேன்மை, அமைதியின்மை கிட்டிய பிரயாணம்

**இடபம**
மனக்கிலேசம், காரியம் கை கூடும், உறவினர் விரோதம்

**மிதுனம்**
வீண் பிரயாணம், கருத்து முரண்பாடு, முயற்சிபலிதம்

**கடகம்**
திருமணம் சம்பந்தமான விடயம், பணவரவு, போஷன சுகம்

**சிங்கம்**
சந்தோசமான நிலை, தொழில் முயற்சி விருத்தி, விரோதிகளின் உறவு

**கன்னி**
புத்திரர்களால் சலனம், பணச் செலவு, துக்கமான செய்தி

**துலாம்**
வாகன சுகம், தாய்வழி உறவு, நண்பர்கள் நம்பிக்கையின்மை.

**விருச்சிகம**
இடமாற்றம், பொருள்வரவு காரிய நன்மை.

**தனுசு**
எடுத்த காரியம் தாமதம், கருத்துவேறுபாடு, தனநட்டம்

**மகரம்**
நிம்மதியான நிலை, சிறு வியாதி, பிரயாண பயம்.

**கும்பம்**
எடுத்த காரியம்தடை, விவதம், பிரயாணம்

**மீனம**
சிறப்படைதல், பொருள் வரவு, காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப் பகுதி சனசமூக நிலையங்களுக்கான இவ்வருட நன்கொடைப்பணம் 1000 ரூபாவை வழங்குவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறைபிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

சகல சனசமூக நிலையங்களும் பருத்தித்துறைபிரதேச சபையில் இந் நன்கொடைப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாமென பருத்தித் துறை பிரதேச சபைத் தலைவர். திரு ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் அறிவித்துள்ளார். (உ-52)


விவசாயிகள் ஐக்கியப்பட வேண்டும்
அனைவரும் ஸ்தாபன மயப்படுத்தப்பட வேண்டும்
விளை பொருட்களுக்கு உச்ச விலைகளும்
பரந்தளவிலான சந்தை வாய்ப்புகளும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்
விவசாயிகளின் இவ் வெண்ணங்கள் ஈடேறி,
வாழ்க்கைத் தரம் உயர எம்மை ஆதரித்திடுவீர்!



என்றும் உங்கள் சின்னம் நங்கூரம். ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## விஞ்ஞானம்

### மாதிரி வினாத்தாள் - 4 பகுதி - I

ஆக்கம்: மேஜா பஞ்சலிங்கம்

எல்லா வினாக்களுககும் விடை தருக.

01-20 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக

01) வர்த்தக முறையில் ஒட்சிசனைப் பெற்றுக் கொள்வதற்கு வளி திரவ நிலையை அடையும் வரை குளிராக்கப்படுகிறது. வளியை எவ் வெப்பநிலைவரை குளிரச்செய்து திரவ வளியைப் பெறலாம்.
(1) -180பாகைC (2) -196பாகைC (3) -200பாகைC (4) -273 பாகைC

02) பின்வருவனவற்றுள் அமிலமாகவும் மூல மாகவும் தொழிற்படும் ஒட்சைட் எது?
(1) காபனீரொட்சைட் (2) மக்னீசியம் ஒட்சைட்
(3) கல்சியம் ஒட்சைட் (4) நாக ஒட்சைட்

03) மனிதனின் விந்தும் பெண்ணின் சூலும் இணையும் இடம்
(1) யோனிமடல் (2) கருப்பை
(3) பலோப்பியாக்குழாய் (4) சூலகக்கான்

04) வெப்பமேற்றுதல் அவசியமின்றி ஊக்கி பயன்படுத்தி ஒட்சிசன் வாயுவைத் தயாரிக்க பயன்படும் இரசாயனப் பதார்த்தம் எது?
(1) செவ்வீயம் (2) வெடியுப்பு
(3) பொற்றாசியம் குளோரேற்று (4) ஐதரசன் பரவொட்சைட்டு

05) மனிதனின் குரல்வளைக்கு அண்மையாகக் காணப்படும் பெரிய அகஞ்சுரக்கும் சுரப்பி?
(1) கபச்சுரப்பி (2) தையிரொயிட் சுரப்பி
(3) புடைக்கேடயச் சுரப்பி (4) அதிர்னல் சுரப்பி

06) உயிர்க்கலமொன்றின் சக்தி வெளிப்பாட்டுடன் தொடர்புடைய பகுதி?
(1) நிறமூர்த்தம் (2) புன்கரு
(3) இழைமணி (4) பச்சையவுருமணி

07) A எனும் மூலகத்தின் ஒட்சைட்டின் சூத்திரம் $A_2O_3$ ஆயின் A யினது சல்பேற்றினது சூத்திரம் யாது?
(1) $A_2SO_4$ (2) $ASO_4$ (3) $A_2(SO_4)_3$ (4) $A_2SO_4$

08) கீழ்வருவனவற்றுள் எதில் ஒலியின் வேகம் கூடுதலாக அமையும்?
(1) திரவம் (2) வாயு (3) திண்மம் (4) வெற்றிடம்

09) கீழ்வருவன வற்றுள் ஒலியைக் கடத்தாதது
(1) திண்மம் (2) திரவம் (3) வெற்றிடம் (4) வாயு

10) விசை ஒன்றுக்கு உள்ளது?
(1) திசை (2) பருமன்
(3) பிரயோகப்புள்ளி (4) மேற்கூறிய யாவும்

11) மூலக மொன்றின் கருவிலுள்ள ஏற்றமற்ற துணிக்கை
(1) நியூத்திரன் (2) புரோத்திரன்
(3) இலத்திரன் (4) நியூக்கிளியோன்

12) பூந்துணரில் உள்ள உறிஞ்சிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் மேற்கொள்ளும் தாவரம் எது?
(1) சணல் (2) மரவள்ளி (3) இஞ்சி (4) வெங்காயம்

13) பின்வருவனவற்றுள் எது ஒரு கல அங்கி
(1) அமீபா (2) மண்புழு (3) புல் (4) மனிதன்

14) $CaCo_3$ இன் மூலக்கூற்றுத் திணிவு (Ca=40, C=12, O=16)
(1) 68 (2) 80 (3) 56 (4) 100

15) ஒரு கடத்தியினூடாக மின்னோட்டம்————செல்லும்போது அதன் ...

## கல்வியியல் கல்லூரியில்பட்டம்பெற்று

# ஆசிரியர் நியமனம் பெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)
கல்வியியல் கல்லூரியில் டிப்ளோமாப் பட்டம் பெற்று வெளியேறியவர்களுக்கான நியமனக் கடிதங்கள் 11ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் வழங்கப்படும்என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு

கனகசிங்கம் கலாமோகன் ரீ.சி ஒழுங்கை மானிப்பாய்,
செல்வி. மலர்விழி தவகுலசிங்கம் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
வைத்திலிங்கம் விமலன் நவாலி தெற்கு மானிப்பாய்,
செல்வி. புஸ்பமாலா நடராசா ஆஸ்பத்திரி வீதி சங்கானை,
செல்வி. பத்மலோஜினி வேலையா, தொல்புரம் மத்தி,சுழிபுரம்;

தீவக வலயப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ள கீழ்வரும் பெயர் உடையவர்களை எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை தீவக வலயக்கல்வி அலுவலகத்திற்கு சமுகமளித்து நியமனக் கடிதங்களைப் பெற்று உரிய பாடசாலைகளில் கடமையை ஏற்குமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.

அவர்களின் விபரம் வருமாறு:
பரராஜசிங்கம் பரந்தாமன் 18/4,பி.ஏ தம்பிலேன், வண்ணார்பண்ணை,
செல்வி.மஞ்சுளா சிவசுப்பிரமணியம் திருநெல்வேலி வடக்கு,
எஸ். சிறிகரன் 5 ஆம் வட்டாரம் நயினாதீவு,
செல்வி.வைதேவி கணநாதன் 19/37 பிறவுண் வீதி, கந்தர்மடம்; (க-3)

## வலி. கிழக்கு பிரதேச சபை

# ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கூடுதல் நிதி ஒதுக்கவும்

## பிரதமசெயலரிடம்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
வலி; கிழக்கு ஆயுள்வேத பிரதேச சபைக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலும் பார்க்க கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டால் சிலபயனுள்ள வேலைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்'

மேற்கண்டவாறு யாழ்ப்பாணத்தில் கடந்தமாதம் இடம்பெற்ற குறைகேள் அமர்வின் போது வலி. கிழக்கு நீர்வேலி பிரதேச சபையின் பிரதம வைத்திய அதிகாரியும் அரச சேவை சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்க இணைச் செயலாளருமான டாக்டர் பொன். சண்முகரத்தினம் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, உள்ளூராட்சி உதவி ஆணையர் ஆகியோரிடம் இதுசம்பந்தமாக எடுத்துரைத்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

வலி. கிழக்கு ஆயுள்வேத பிரதேச சபையில் ஆறு வைத்தியசாலைகள் இயங்கிவருகின்றன.

பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து வலிகாமம் கிழக்கு, மற்றும் மேற்கு பகுதிகளில் வசிப்பதனால் இவ் வைத்தியசாலைகளைப் பாவிப்போர் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகிறது;

தினமும் சராசரி 80 இற்கும் மேற்பட்டோர் இவ் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கைதடியில் இயங்கி வந்த சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை, உடுவிலில் உள்ள 47 ஆம் இலக்க வீட்டில் இயங்கிவருகிறது.

மேலும் வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இரண்டு வைத்திய அதிகாரிகளை நியமிக்க அனுமதி தருவதுடன் மருந்தாளர் ஆயுள்வேத தொழிலாளியையும் தந்து தவும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

வலி: கிழக்கு பிரதேச சபைக்கு அச்சுவேலியில் ஆயுள்வேத மருந்தகம் கட்டுவதற்கு காணி தரப்பட்டுவிட்டது: விரைவில் கட்டிட வேலைஆரம்பமாகும். நெடுந்தீவிலும் சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை கட்ட காணி ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்ட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க)

14) $CaCo_3$ இன் மூலக்கூற்றுத் திணிவு (Ca=40, C=12, O=16)
(1) 68 (2) 80 (3) 56 (4) $10_0$

15) ஒரு கடத்தியினூடாக மின்னோட்டம்————செல்லும்போது அதன் தடைக்கும் நீளத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு
(1) தடை=நீளம் (2) தடை நேர்விகிதசமன் நீளம்
(3) தடை நேர்மாறு விகிதசமன் நீளம் (4) தடை பொது நீளம்

16) தரப்பட்டவற்றில் மாறும் தடையியாக பாவிக்கமுடியாதது எது?
(1) இரிய நிறுத்தி (2) றேடியோவின் ஒலித்தடையாளி
(3) காபன் தடையி (4) மாறும்தடைப் பெட்டி

17) இரசவொட்சைட்டின் நிறம் என்ன?
(1) சிவப்பு (2) கறுப்பு (3) பச்சை (4) வெள்ளை

18) கண்ணினுள் செல்லும் ஒளியின் அளவைக் கட்டுப்படுத்துவது எது?
(1) கதிராளி (2) கண்வில்லை (3) விழித்திரை (4) விழிவெண்படலம்

19) வளியடக்கம் குறைந்த மண்வகை எது?
(1) களிமண் (2) இருவாட்டிமண்
(3) மணல் மண் (4) தோட்டமண்

20) ஆவர்த்தன அட்டவணையின் தந்தை எனக் கருதப்படுபவர்
(1) மெண்டல் (2) தொபரைனர் (3) மெண்டலீவ் (4) நியூட்டன்

---

## மாட்டைத் தேடிச்சென்றவர் யானையின் தாக்குதலிற்குப் பலி

(கொழும்பு)

மாட்டைத் தேடி வீட்டை விட்டுச் சென்றவர், காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்,

மேற்படி சம்பவம் காட்டஸ்டிகிடிய என்ற இடத்தில் புளியங்கூடல் பகுதியில் இடம் பெற்றது:

மேய்ச்சலுக்காகச் சென்ற தனது மாடுகள் இரவு 10 மணியாகியும் வீடு திரும்பாததால் அவற்றைத் தேடிச் சென்ற நபரே இவ்வாறு மரணமானவராவார். (க)

## இரு கைகளையும் இழந்த சிறுவன்

[மட்டக்களப்பு]

கைக்குண்டொன்றைஎடுத்து விளையாடிய சிறுவன் ஒருவன் அது வெடித்ததினால் தனது இரண்டு கைகளையும் இழந்த பரிதாப சம்பவம் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இடம் பெற்றுள்ளது.

ஆறுமுகம் ஞானசேகரன் என்ற சிறுவனே இருகைகளையும் இழந்தவனாவான். (ந)

---

தியசாலைகள் இயங்கிவருகின்றன.

பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்து வலிகாமம் கிழக்கு, மற்றும் மேற்கு பகுதிகளில் கட்ட காணி ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்ட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## ஊர்வலங்கள், வாகன பவனிக்கு பொலிஸார் தடை விதிப்பு

(கொழும்பு)

ஊர்வலங்கள், வாகன பவனிகள் என்பவற்றுக்கு இடமளிக்க வேண்டாம் என பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கான பணிப்புரைகள் பிரதிப்பொலிஸ்மா அதிபர், உதவிப் பொலிஸ்மா அதிபர், மாவட்ட பொலிஸ் அதிபர், மற்றும் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருப்பதாக பொலிஸ் தலைமையகம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் தொடர்பாக வரும் முறைப்பாடுகள் குறித்துஅந்தந்த பொலிஸ் நிலையங்கள் உடனடியாகவே விசாரணை நடத்தி தீர்வு காணுமாறும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், பொதுத் தேர்தலை ஒட்டி கூட்டங்கள் ஊர்வலங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க அரசு முடிவு செய்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருப்பதும் குறிப்படத் தக்கது. (உ)

## இன்று கலந்துரையாடல்

நல்லூர் பிரதேசசபையின் கலந்துரையாடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை சபைத்தலைவர் க. மணிபல்லவராஜன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைக்குட்பட்ட சனசமூகநிலைய உறுப்பினர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய நிகழ்வில் சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை வழங்கல், 1999 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டுப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தெரிவு செய்யப் பெற்ற மாணவர்கள், 1998 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு நன்கொடை வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன;

(செ-103)

### இன்று ஒரு தகவல்

## வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு

ஒரு காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அக்காட்டில் நாரை ஒன்றும் வசித்து வந்தது; நாரையை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்தது. நரி.

ஒரு நாள் நாரையைக் கண்ட நரி, ''நண்பா! இன்று என் வீட்டில் உனக்குச் சுவையான விருந்து வைக்க எண்ணியுள்ளேன். என் வீட்டுக்கு நீ வரவேண்டும்'' என்றழைத்தது.

நாரையும் அதன் அழைப்பை ஏற்று நரியின் வீட்டிற்குச் சென்றது; நரி பாயாசம் தயாரித்து இரண்டு தட்டுக்களில் ஊற்றி ஒன்றைத் தனக்கு வைத்துக்கொண்டு மற்றொரு தட்டை நாரையிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னது.

நரி தட்டிலிருந்த பாயாசத்தை நாக்கினால் நக்கி ருசித்துக் குடித்தது. நாரையோ தனது நீண்ட அலகினால் பாயாசத்தைத் தட்டிலிருந்து குடிக்க முடியவில்லை.

''நாரையே! ஏன் தயக்கம் காட்டுகின்றாய் தயக்கப்படாமல் சாப்பிடு! என்று கூறியது நரி.

தனக்கு ஏற்பட்ட அவமானத்தை மறைத்துக்கொண்ட நாரை நண்பனே! எனக்கு இன்று திடீரென வயிறு சரியாக இல்லை; நான் இன்னொரு நாளைக்கு வருகிறேன்! என்று கூறி விட்டுப் புறப்பட்டது

நாரையை அவமானப் படுத்திவிட்டோம், என்று சந்தோஷப்பட்டது நரி. நாரையோ எப்படியாவது நரியைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டது.

சில நாட்களின் பின் நரியைக் கண்ட நாரை, ''நண்பனே! எனக்கு இன்று பிறந்த நாள் இன்று நீ என்னுடன் விருந்துண்ண வேண்டும்! என்று கேட்டுக் கொண்டது.

நரியும், நாரையின் அழைப்பை ஏற்று அதன் வீட்டிற்குச் சென்றது. நாரை மிகவும் உயரமானதாகவும், கழுத்துப் பகுதி மிகவும் குறுகியதாகவும் உள்ள இரண்டு ஜாடிகளுக்குள் சுவையான பாயாசத்தை ஊற்றி ஒன்றைத் தான் எடுத்துக் கொண்டு மற்றதை நரியிடம் கொடுத்தது. பின் நாரை அந்தக் குறுகிய ஜாடியினுள் தன் தலையை விட்டு தன் நீண்ட அலகினால் பாயாசத்தை உறிஞ்சிக் குடித்தது.

ஆனால் நரியினால் அந்த உயரமான ஜாடியை எட்டிப் பார்க்க முடியவில்லை. அத்துடன் அதன் குறுகிய கழுத்துப் பகுதிக்குள் தலையை விடவும் முடியாமல் நரி ஏமாந்து நின்றது. நாரை அதை நோக்கி ஏளனச் சிரிப்புடன் என்ன நரியே எவ்வளவு ருசியாக இருக்கிறது பாயாசம் ஏன் சாப்பிடாமல் இருக்கின்றாய் கூச்சப்படாமல் சாப்பிடு! என்று சொன்னது: இன்று எனக்கு வயிறு சரியில்லை. இன்னொரு நாளைக்குச் சாப்பிடுகிறேனே என்று கூறியவாறு நரி, நாரையின் வீட்டை விட்டு வெளியேறியது.

ஒருவரை ஒரு சந்தர்ப்பத்தில் நாம் ஏமாற்றிவிட்டோம் என்று இறுமார்ப்புக் கொள்ளக் கூடாது. ஆனைக்கும் அடி சறுக்கும். இன்னொரு சந்தர்ப்பத்தில் நாமும் ஏமாற்றப் படலாம். ஆகையினால் எமது அறிவுக் கூர்மையை விட மிகுந்த அறிவுக் கூர்மையுடையவர்களும் இவ்வுலகில் உள்ளார்கள் என்பதை அறியவேண்டும். (த)

## ஆண்டு 05, க.பொ.த(உயர்தரம்) ஊக்குவிப்பு கொடுப்பனவு இன்று

[யாழ்ப்பாணம்]

1999 ஆம் வருடம் ஆண்டு 5இல் புலமை பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியோருக்கும், 1998ம் ஆண்டு க. பொ. த. (உ-த) பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்குமான ஊக்குவிப்பு நன்கொடை வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்

பிள்ளையார் கோவிலடி திருநெல்வேலி

செல்வன் கிருஷ்ணசாமி கிருஷ்ணதாஸ், வீரபத்திரர் கோவிலடி கல்வியங்காடு

செல்வி அனுஷியா அரியசீலன், ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு

செல்வன் அரியதாஸ், மைக்

யாழ். மாவட்டத்தில்

# தேர்தலை உடன் ஒத்திப்போடவும் தேர்தல் ஆணையருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் தற்போதைய சூழ்நிலையில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெறுவதோ அத்தேர்தலில் மக்கள் சுயாதீனமாக வாக்காளிக்கக் கூடிய சூழ்நிலை தற்சமயம் இல்லை. எனவே பொதுத்தேர்தலை குறிப்பிட்டகாலம் வரை ஒத்திவைப்பது பொருத்தம் என்பதே எனது அபிப்பிராயமாகும்.

யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழு-1 இன் தலைவர் தர்மராசா வில்சன் தேர்தல் ஆணையாளருக்கு விடுத்த வேண்டுகோளில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது; யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஏற்பட்ட இராணுவ அனர்த்தங்கள் தென்மாரட்சி, கொழும்புத்துறை, குருநகர், அரியாலைப் பகுதி மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், மரநிழல்களிலும் தமது வாழ்வை பல இன்னல்கள் மத்தியில் கழித்துவருகின்றனர்.

அதுமாத்திரமன்றி தற்போது இடம் பெற்று வரும் பல்குழல் தாக்குதல், மற்றும் யுத்த விமானங்களின் பாரிய சத்தங்கள் போன்றவற்றால் நம் தமிழ் மக்கள் பாரிய மன அழுத்தங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே மக்கள் தமது சொந்த இடங்களிற்கு திரும்பி சாதாரண வாழ்வு நடாத்தாத வரையாழ். மாவட்டத்தில் தேர்தல் நடத்துவது நீதியானதாக அமையமாட்டாது என்பதே எனது அபிப்பிராயமாகும்.

இவ்வாறு அவ் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(புலோலி)

பருத்தித்துறை சென்தோமஸ் போரூட் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி இன்று 10ஆம் திகதி லட்டிறோமன் கத்தோலிக்க ஆண்கள பாடசாலை மைதானத்தில் முனை போரூட் தலைவர் எஸ். பீரியன் டொன் போஸ்கோ தலைமையில் நடைபெறுகின்றது. பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. இருதயதாஸ் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ-52)

## ஊர்வலத்தை கலைத்த பொலிஸார் தாக்கப்பட்டனர்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் இடம்பெற்ற ஊர்வலமொன்றை கலைக்க முற்பட்ட பொலிஸார் தாக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

மின்னேரியா, ஹிங்கிராங்கொட பகுதி மக்கள் இணைந்து ஊர்வலம் நடத்தியவேளை அவ்விடம் விரைந்து தடுக்கமுற்பட்ட பொலிஸாரை ஊர்வலத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதனால் 3 பொலிஸார் பலத்த காயமடைந்துள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் தடிகள், பொல்லுகள், கற்கள் என்பன பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

அச்சமயம்

வீதியால்வந்த பேருந்துகள் மீதும் ஊர்வலம்நடத்தியோர் தாக்குதல் நடத்தியதில் பொதுமக்கள்பலர் காயமடைந்தனர். (உ)

## வெளிநோயாளர் பிரிவு திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி அரசினர் வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவிற்கான புதிய கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிதி உதவியுடனும் கரவெட்டி வாழ் மக்களின் பங்களிப்புடனும் இக்கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டது.

கரவெட்டி பிரதேச செயலர் மேற்படி கட்டடத்தொகுதியை திறந்துவைத்தார். [க-41]

## கடனை திருப்பி செலுத்தாத விவசாயிகளுக்கு எதிராக கமநல திணைக்களம் நடவடிக்கை

(புலோலி)

யாழ். கமநலச் சேவைத் திணைக்களத்தினூடாக 'சீடா' திட்டத்தின் கீழ் கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பெற்று உரிய காலம் கடந்தும் கடன் பணத்தைச் செலுத்தாதவர்களுக்கு எதிராக நீதிமன்ற மூலம் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான நடவடிக்கைகளை கமநலச் சேவை நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

கமநலச் சேவை நிலையங்களில் கடன் அடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்

திக்கு முதல் பணத்தைக் கட்டா விட்டால் இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

## குரக்கன் செய்கையில் ஈடுபாடு

## மோட்டார் சைக்கிள் விபத்து

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் அரசடிச் சந்திக்கு அண்மையில் மோட்டார்சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதிக்கொண்ட போதும்

குவிப்பு நன்கொடை வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வு அவரின் வாசஸ்தலத்தில் இடம்பெறும்:

நல்லூர் பிரதேச சபைக் கூட்டட்டோருக்கும் இவ் ஊக்குவிப்பு பணம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## 5 ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி நன்கொடை பெறுவோர்

செல்வி கவிதா தங்கவேல், 45, பாற்பண்ணை வீதி திருநெல்வேலி

செல்வி பிருந்தா வேணுகோபால், பத்திரகாளி கோவிலடி திருநெல்வேலி

செல்வி பிரசாந்தி அற்புதலிங்கம், பொற்பதிவீதி, செம்பாடு ஒழுங்கைகொக்குவில் கிழக்கு.

செல்வி தனுஷியா திரிபுவனேஸ்வரன், 35, புலவனார் வீதி, கல்வியங்காடு

செல்வன் ஜெய்கரன் சுஜீவன் பொற்பதி வீதி, கொக்குவில்

செல்வி நிரோஜினி சிவதாசன் கலட்டி ஒழுங்கை கோண்டாவில் மேற்கு

செல்வி கார்த்திகா அமிர்தலிங்கம், பழம் கிணற்றடி கொக்குவில் மேற்கு

செல்வன் அரியதாஸ், மைக்சன் அருண், சேச் லேன் நல்லூர்

செல்வன் வாமதேவக் குருக்கள் வாமராஜ், கங்காசுதம் பாற்பண்ணை வீதி திருநெல்வேலி

உதயகுமார் தமோனுதன், 3ம் கட்டை பருத்தித்துறை வீதி கல்வியங்காடு

## க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் சித்திபெற்று நன்கொடை பெறுவோர்

செல்வன் வைத்திலிங்கம் குலோத்துங்கன் (முகாமைத்துவம்) பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி.

செல்வன் சண்முகலிங்கம்சதீஸ் (முகாமைத்துவம்) கோணவளைவீதி, கொக்குவில்கிழக்கு

செல்வி கிருஷ்ணகோபி பரராஜசேகரம் (மருத்துவம்) கலட்டிவீதி, கோண்டாவில் மேற்கு

செல்வன் பஞ்சாட்சரம்பிரம்கன் பனிக்கர்லேன், திருநெல்வேலி;

செல்வன்எல். சி. ஆர்றொகான் (மருத்துவம்) கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை.

(க)

## ஈடுபாடு

[கல்வயல்]

பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் அண்மைக் காலமாக குரக்கன், சோளம் போன்ற பிற பயிர்ச்செய்கையில் ஆர்வம் காட்டுகின்றனர்.

வாழை, மரவள்ளி பயிர் செய்கைகளினால் நிரந்தர நிலையான வருமானம் கிடைப்பது சாத்தியமற்றதாகையால் மேற்படி பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்காட்டுகின்றனர்.

(த-111)

## பங்கீட்டு அட்டைகள் வழங்கல்

[கல்வியங்காடு]

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட J/109, J/107 கிராம சேவையாளர் பிரிவில் வசிப்போருக்கு புதிய பங்கீட்டு அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன;

பதிவு செய்த குடும்பத் தலைவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகம் தந்து 5 ரூபாய் செலுத்தி புதிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கிராமசேவையாளர் வேண்டுகின்றனர்-

(த-54)

நீர் இறைக்கும் இயந்திரங்களைப் பெற்ற சில விவசாயிகள் முழுப்பணத்தையும் செலுத்த வேண்டிய காலம் கடந்தும் பணத்தைச் செலுத்தாமல் உள்ளனராம் இவர்கள் இம் மாதம் 15 ஆம் திக

மோதிக்கொண்ட போதும் தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள ஏற்படவில்லை.

எனினும் இச்சம்பவத்தின் போது மோட்டார்சைக்கிள் பலத்த சேதத்திற்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

(செ-12)

# தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற கூட்டுச் சேர்வது அவசியமாகும்

## மக்கள்ஜனநாயகப்பேரவை அறிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக மக்கள் ஜனநாயகப் பேரவை தீர்க்கமான ஒருமுடிவை எடுத்துள்ளது.

தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களான அம்பாறை, திருகோணமலை போன்ற இடங்களில் தமிழர் அணிகள் ஒன்று சேர்ந்து ஓரணியில் திரளமுடியாது போயுள்ளது.

இந்நிலையில் ஒட்டுமொத்தமான ஐக்கியம் என்பது தமிழ் மக்கள் மத்தியில் கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது,

இவ்வாறு மக்கள் ஜனநாயகப் பேரவையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இ. இராமேஸ்வரன் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அக்குறிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் நன்மை கருதி குறைந்தபட்சக் கூட்டு என்பது அவசியமாகும்,

அவ்வகையில்

★ அழிவைத் தரும்யுத்தத்தை உடனடியாக நிறுத்துதல்,

★ இடைக்கால அமைதியை முன்வைத்தல்,

★ வடக்குக்-கிழக்கு இணைந்த நிரந்தரத் தீர்வுத் திட்டத்தை முன்னெடுத்தல்,

போன்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு மக்கள்ஜனநாயகப் பேரவை ஈ. பி ஆர். எல். எவ் இன்வரதர்அணியுடன் கூட்டுச் சேர்ந்து சுயேட்சை அணியாகப் போட்டியிடவுள்ளது எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந)

# உலக தரிசன அறிவுப் போட்டி -02

## போட்டி விதி முறைகள்

1) வயது வேறுபாடின்றி எவரும் பங்குபற்றலாம் (வலம்புரி குடும்பத்தினரைத் தவிர)
2) வினாக்கள் யாவும் ஓகஸட் மாத வலம்புரியின் உலக தரிசனத்தைச் சார்ந்ததாக அமையும்.
3) போட்டியாளர் தனது பெயர், விலாசம், பிறந்த திகதி என்பனவற்றை குறித்த படிவத்தில் எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து ''வலம்புரி'' இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
4) போட்டியில் அதிகூடியபுள்ளிகளைப்பெறும்மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அது பற்றிய விபரம் வலம்புரியில் வெளியிடப்படும்.
5) விடைகள் யாவும் 25- 9- 2000 இற்கு முன் வந்து சேர கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
6) வினா இலகங்களை குறித்து விடைகளை எழுதினால் மட்டும் போதுமானது [வினாத்தாளை இணைக்க வேண்டாம்]

## போட்டியில் வெல்ல.....

மாதந்தோறும் நடைபெறும் உலக தரிசன அறிவுப் போட்டியில்வெற்றிபெற்று பெறுமதியான பரிசில்களைவெல்ல இன்றே வலம்புரியின் உலக தரிசனத்தைப்பாருங்கள்'

01) இந்தியாவில் எந்த மாநில மக்கள் 100%எழுத்தறிவுள்ளவர்களென்று ஐ நா .கணித்துள்ளது?
02) ரஷ்யத் தொலைக்காட்சிக் கோபுரத்துக்கு தீவைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட சையூட்டு எவ்வளவு ?
03) சிங்கப்பூர் வானொலியில் புகழ்பூத்தஇலங்கை அறிவிப்பாளரின் குரல் கேட்கிறதே அவர் யார்?
04) அகோர முகங்கொண்டோர் போட்டிஎந் நாட்டில்நடைபெறுகின்றது?
05) ரஷ்ய நீர் மூழ்கி எந்தக் கடற் பரப்பில் மூழ்கியது?
06) பாக்கிஸ்தானில் எப்பொழுது உள்ளூராட்சித் தேர்தல் நடை பெறும்?
07) சீனாவின் செய்தியாளர் தினம் எத்திகதியில் கொண்டாடப்படும்?
08) பாரதிய ஜனதாக்கட்சியின் புதிய தலைவர் யார்?
09) கத்தோலிக்க ஒலிபரப்பு அண்மையில் எந்த நாட்டில் நடைபெற்றது?
10) தமிழ் நாட்டு சைவ ஆலயங்களைத் தனியாரிடம் ஒப்படைக்கும்படி கூறியவர் யார்?
11) பாகிஸ்தான் கடைசியாக எந்த ஏவுகணையை விட்டதாக அமெரிக்கா கூறுகின்றது.
12) பெங்களூருக்கு அண்மையில் எந்நாட்டுப் பிரதமர் வந்தார்?
13) மகாத்மா காந்தியின் பேரன் எந்த நாட்டிற்குத் தூதுவராக நியமிக்கப்பட்டார்?
14) அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அல்கூர் அவர்களின் மகள் பெயரென்ன?
15) உலக நிலவியல் மகாநாடு எங்கு நடைபெற்றது?
16) நடிகர் ராஜ்கபூரின் படவிழா எங்கு நடைபெற்றது?
17) ஐ.நா சபையில் அங்கம் வகிக்க எட்டாவது முறையாகவும் முயற்சித்த நாடு எது?
18) ஹிஸ்புல் முஜாகுதீன் என்றால் என்ன?
19) நக்கீரன் பத்திரிகையின் துணை ஆசிரியர் யார்?
20) ஓய்வு பெறும் எந்த நாட்டு ஜனாதிபதிக்கு நடிகர்கள் நிதி சேர்த்து கொடுத்தார்கள்?
21) குளோனிங்முறையில் மனிதனை உருவாக்க அனுமதி வழங்கிய நாடு எது?
22) எங்கு நடைபெற இருந்த சகாரா கோப்பைகிறிக்கெட் போட்டி ரத்து செய்யப்பட்டது?
23) மியான்மார் நாட்டின் எதிர் கட்சித் தலைவரின் பெயர் யாது?
24) ஊழலைச்சித்தரிக்கும் பொருட்காட்சி அண்மையில்

# ஏழை நாடுகளின் கடன்களைத் திருப்பிக் கேட்கவேண்டாம்

## ஐ.நா.வில் மனுதாக்கல்

(வாஷிங்டன்)

உலக தரிசனம்

ஏழை நாடுகளின் கடனைத் திருப்பிக்கேட்காது விடும்படி உலகநாடுகளைக் கேட்டுக் கொள்ளும் மனு ஒன்றை ஐ நாவில் நைஜீரிய அதிபர் சமர்ப்பித்தார்.

இதனை77 ஏழை நாடுகளின் சார்பில் நைஜீரிய அதிபர் ஐ.நா புத்தாயிரம் ஆண்டுக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

158 நாடுகளைச் சேர்ந்த 220 இலட்ச கையொப்பமிட்டுள்ள இந்த மனுவில் ஏழை நாடுகளில் கடன்கள் தாங்கமுடியாதென்றும் இந்த நாடுகள் வட்டியுடனோ வட்டியில்லாமலோ திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளன வென்றும் இந்தக் கடன்களைக் கொடுத்த நாடுகள் திருப்பி ஏழை நாடுகளிடம் வாங்கவேண்டாம் என்றும் கூறும் அந்த மனுவை ஐ.நா சபைப் பொதுச் செயலரிடம் நைஜீரிய அதிபர் சமர்ப்பித்தார்.

(அ)

ரஷ்ய யுத்த கப்பலிலிருந்து

# ஏவப்பட்ட எறிகணையினாலேயே "த காஸ்ட்" கப்பல் நீரில் மூழ்கியது

(மொஸ்கோ)

ரஷ்ய யுத்தக்கப்பல் ஒன்றில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணையே ''த காஸ்ட்'' நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கக் காரணமென ஜேர்மன் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தியினை ரஷ்ய கடற்படைத்தரப்பு மறுத்துள்ளது.

ரஷ்யாவின், ''பீற்றதகிரேட்'' என்ற கப்பலில் இருந்து, பயிற்சி நடவடிக்கையின் போது ஏவப்பட்ட எறிகணை வீழ்ந்து வெடித்ததிலேயே ''த காஸ்ட்'' என்ற ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் கடலில் மூழ்கியதாக ஜேர்மன் பத்திரிகையொன்று உலக சேவை செய்தி நிறுவனத்தினை மேற்கோள்காட்டி அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

ரஷ்ய கடற்படைத்தரப்பினர் மேற்படி செய்தியை முற்றாகவே நிராகரித்துள்ளதுடன், பயிற்சி நடவடிக்கையின் போது தமது தரப்பு உண்மையான தோட்டாக்கள் மற்றும் எறிகணைகளை பயன்படுத்துவதில்லை எனவும் விளக்கமளித்துள்ளது.

இதேசமயம், கடந்த மாதம் 118 பேருடன் கடலில் மூழ்கிக ரஷ்ய அணுநீர்மூழ்கிக்கப்பல் விபத்துக்குள்ளானதற்கான சரியான காரணம் இன்னமும் அறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# மே. வங்கத்தில் அமைதிநிலை சீர்குலைவு பாதுகாப்பு அமைச்சர் விரைவு

(மும்பை)

மேற்கு வங்கத்தில் சீர்குலைந்து வரும் நிலைமைகளை அறிவதற்காக பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அப்பகுதிக்கு விஜயம் மேற் கொண்டுள்ளார்.

மேற்கு வங்கத்தில் சில மாவட்டங்களில் கிளர்ச்சிகளும் அசம்பாவிதங்கள் நடந்துவருகின்றனவென்று சொல்லப்படுகிறது.

5 மாவட்டங்களில் அரசியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டபகுதிகளைப்பார்வையிடுவதற்காக இவர் விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

இங்கு அரசியல் பழிவாங்கல்கள் நடப்பதாகவும் ஒருபகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவருகிறார்களென்றும் மத்திய அரசு உடனடியாகத் தலையிடாது விட்டால் தான் விலகப்போவதாகவும் திருநாமல காங்கிரஸ் தலைவர் மம்தா பெனார்ஜி தெரிவித்திருந்தார்.

திருநாமல் காங்கிரசுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடையில் தான் இந்தமோதல் 5 மாவட்டங்களில் இடம் பெற்றன.

(து)

# ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது படையெடுக்கும் உரிமை இல்லை

உலகநாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தன்னிச்சையாக ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது படையெடுக்கும் உரிமை இல்லையென்று ரஷ்ய அதிபர் விளாடிமீர் புட்டின் தெரிவித்தார்.

ஐ. நாவின்புத்தாயிரமாண்டுககான முதல் பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் ரஷ்ய அதிபர் மேறகண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தொடர்கையில், அதே வேளை ஐக்கிய நாடுகள் சபைக்குத்தான் இப்படித் தலையிடும் உரிமை உண்

உலக தரிசன அறிவுப் போட்டி - இல: 02

முழுப் பெயர் :-..........................................................

வழங்கிய நாடு எது?

22) எங்கு நடைபெற இருந்த சகாரா கோப்பைகிறிக்கெட் போட்டி ரத்து செய்யப்பட்டது?

23) மியான்மார் நாட்டின் எதிர் கட்சித் தலைவரின் பெயர் யாது?

24) ஊழலைச்சித்தரிக்கும் பொருட்காட்சி அண்மையில் எங்கு நடைபெற்றது?

25) வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதில் முன்வணி வகிக்கும் இந்திய மாநிலம் எது?

உலக தரிசன அறிவுப்போட்டி இலக்கம்-2 இல் பங்கு கொள்ளும் அன்பு வாசகர்களே! இம்முறை உங்களிற்கான பெருமதிவாய்ந்த பரிசில்களை வழங்க முன் வந்துள்ளவர்கள்,

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
**234, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ. பே. இல: 2573**

## உலக தரிசன அறிவுப் போட்டி - இல: 02

முழுப் பெயர் :-..............................................

முகவரி :-..............................................

..............................................

பிறந்த திகதி :-..............................................

போட்டியாளர் கையொப்பம்..............................................


பெற்ற புள்ளிகள்

டத்தில் உரைநிகழ்த்துகையில் ரஷ்ய அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தொடர்கையில், அதே வேளை ஐக்கிய நாடுகள் சபைக்குத்தான் இப்படித் தலையிடும் உரிமை உண்டென்றும் குறிப்பிட்டார்.

செக்கோசிலாவிய விடயத்தில் அமெரிக்கா தாக்குதல் நடத்தியதை சுட்டிக்காட்டிய ரஷ்ய அதிபர் இப்படியான இராணுவ நடவடிக்கையை மறைமுகமாக சாடியுள்ளார்.

சமத்துவமான இராணுவப் பாதுகாப்பு, நீதியான உலகம் இதுவே இந்தப் புதிய நூற்றாண்டின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும் என்று கூறினார் விளாடிமீர்புட்டின்.

த. சுபத்திரன்
(றொபேட்)

**அமைதிக்கு உழைப்போம்**
**அதிகாரப் பகிர்வுக்கு குரல் கொடுப்போம்**
**அனைவருக்கும் உதவுவோம்**

**தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்**



அ. வரதராஜப் பெருமாள்

**சுயேச்சைக்குழு-2** X

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்

- குறள் -

# வலம்புரி

## பொன்னம்மாவின் மணி

தேர்தல்கள் காலத்துக்குக் காலம் வரும்போது சுய விளம்பரங்கள் தடல் புடல். மக்கள் வாக்களிப்பது நாடும் தாமும் பயன் பெற என்பதைப் பகுத்தறிவுடையவர்கள் எவரும் மறுக்க முடியாது. மூழந்தாளிட்டுக்கொண்டு உயிருடன் இருப்பதைக் காட்டிலும் நின்று கொண்டு இறப்பது மேல் என்பது சுய கௌரவமுடையவர்களின் எண்ணக் கிடக்கை. இருந்த சுதந்திரமும் பறி போய் ஏதிலிகளாய் யாழ் மண்ணில் மக்கள். என்றுமில்லாத துணிவுபேரினவாத, இனவாதக் கட்சிகளுக்கு இந்தத்தேர்தலில் கிடைத்திருக்கிறது. நாம் அரை வேக்காட்டு அரசியலில் கண்ட பெறு பேறு அது.

கோயிலில் மணி வைப்பவர்கள் பெயர் பொறிப்பது சுய விளம்பரத்துக்காக. பொன்னம்மாவின் மணி அசைந்தாடும் ஆண்டாண்டு காலம். அதே போல தேர்தலில் வாக்கு வேட்டைக்கு அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்ற சுய விளம்பரங்கள் பெருமைக்குரியவை அல்ல. அந்தச் சேவைகளை, அது போன்ற பலவற்றைத் தாம் பெறவேண்டுமென்பதற்கே பொன்னான வாக்கு தானம் செய்யப்படும்- பல வேளைகளில் விற்கப்படும். ஏழ்மையும், இல்லாமையும் விற்பனைக்கு ஏதுவாக அமைந்து விடுகின்றன.

நாடு நாசமாகப் போகாது, காலம் காலமாக கட்டிக் காத்த சுதந்திரம் பறிபோகாமல், அரசியல்வாதிகள் உண்மைஉழைப்பைப் பேணவேண்டும். தியாக மனப்பான்...

# கர்ப்பவதியின் வழிபாடுகளிற்கு அமையவே

# குழந்தையின் எதிர்காலம் அமைகிறது

## சோதிடம் கூறும் தத்துவமும் இதுவே

குழந்தைகள் ஈடு இணையில்லாத செல்வங்கள். அவர்கள் நல்லவர்களாக ஆரோக்கியம் உள்ளவர்களாக, புத்திசாலிகளாக உருவாகுவது என்பது சோதிடதத்துவங்களைப் பொறுத்தது. அதன் அடிப்படையில் சில விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

கர்ப்பமுற்றுள்ள பெண்கள், சூரிய அல்லது சந்திர கிரகணத்தின் போது வீட்டை விட்டு வெளியே வந்து. வெற்றுவான வெளியைக் காண்பதும், துரும்பைக்கிள்ளி பின்னம் செய்வது போன்ற எந்த வித பணிகளையும் செய்யக் கூடாது. அப்படிச் செய்யின், அக் குழந்தையின் உடல் உறுப்புகளில் ஏதாவது குறைபாடு ஏற்பட்டு, அப்படிப் பட்ட குறைபாட்டுடன் குழந்தை பிறக்கும் என்பது சாஸ்திரவிதி.

கர்ப்ப வாசத்தின் மூலம், பத்துமாதம் சுமந்து பெறக்கூடிய குழந்தையின எதிர்காலமும், அப் பெண்ணின் உடல் நலமும் அவளுடைய கணவனின் தீர்க்காயுளும் நல்லபடியே அமைந்திருக்க, அவள் கர்ப்ப முற்று இருக்கும்போது, ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு கிரக அதிதேவதையையும் வழிபட வேண்டியது அவசியமாகிறது அது ஏன் என்று கீழே தரப்படுகின்றது.

### வணங்க வேண்டிய தெய்வங்கள்

ஒரு பெண் கர்ப்பமுறும் முதல் மாதத்தில், சுக்கிரன் அதற்குக் காரணமாக அமைவதால், அப் பெண் அந்த மாதம் முழுவதும், சுக்கிரனுக்கு அதிதேவதையான மகாலட்சுமியை வழிபட வேண்டும்.

இரண்டாம் மாதம் அங்காரகன் கருவளர்ச்சிக்குக் காரணமாக அமைவதால், இரண்டாம் மாதம் அங்காரகனுக்கு அதி தேவதையான முருகக்கடவுளை வழிபட வேண்டும்.

மூன்றாம் மாதம் கருவளர்ச்சிககுக் குரு மூலகாரணமாக இருப்பதால், அம்மாதத்தில் குருவுக்கு அதி தேவதையான தட்சணா மூர்த்தியை வழிபட வேண்டும்.

நான்காம் மாதம்-பத்தாம் மாதம் ஆகிய இரு மாதங்களிலும் கருவளர்ச்சிக்குச் சூரியன் மூலகாரணமாக இருப்பதால், அவ்விரு மாதங்களில் சூரியனுக்கு அதிதேவதையான சிவபெருமானை வழிபட வேண்டும்.

ஐந்தாம் மாதமும் ஒன்பதாம் மாதமும், கருவளர்ச்சிக்குச் சந்திரன் மூலகாரணமாக இருப்பதால், அம் மாதங்களில், சந்திரனுக்கு அதிதேவதையான பராசக்தியை வழிபட வேண்டும்.

### சோதிட பலன்

ஆறாம் மாதம் கருவளர்ச்சிக்குச் சனி மூலகாரணமாக அமைவதால், அச்சனிக்கு அதிதேவதையான ஈஸ்வரனை வழிபட வேண்டும்.

ஏழாம் மாதம் கருவளர்ச்சிக்குப் புதன் மூலகாரணமாக அமைவதால். புதனுக்கு அதிதேவதையான மஹாவிஷ்ணுவை வழிபடவேண்டும்.

எட்டாம் மாதம் கருவளர்ச்சிக்கு லக்கினாதிபதி அதிபதியாக விளங்குவதால், குல தெய்வத்தையோ அல்லது இஷ்டதேவதையையோ வழிபடவேண்டும்.

இப்படியாகக் கிரகங்களின் அதிதேவதைகளை வழிபடுவதன் மூலம், சற்புத்திரப்பேறு பெறுவதற்கு வாய்ப்புகளும் வரப்பிரசாதமும் வந்தெய்தும்.

### தோஷம்

ரோகிணி நட்சத்திரத்தில் எந்த பாவத்தில் குழந்தை பிறந்தாலும், அது அக்குழந்தையின் தாய் மாமனுக்கு ஆகாது என்று சொல்லப்படுகிறது. அக் குழந்தையின் 12 வயது முதல் 13 வயது வரையில், அதனுடைய தாய்மாமனுக்குக் கண்டாதி கண்டங்களை ஏற்படுத்துகிறது என்பது சாஸ்திரவிதி. அனுபவத்திலும், இது ஓரளவு ஒத்து வருகிறது. ஆணாயின் பலத்த தோஷத்தையும் பெண்ணாயின் ஓரளவு குறைந்த தோஷத்தையு ஏற்படுத்தவே செய்கிறது. ஒரு சில குழந்தைகளின் ஜெனனம் தாய் மாமனுக்குப் பிரச்சினையாக ஆகி விடுகிறது. தாய்மாமனுக்கு ரோகிணி விரதம் சாந்தி தரும்.

ஜெனன லக்கினத்தைச் சனியும் செவ்வாயும் நோக்கும் வகையில் பிறக்கும் குழந்தைகள் கொடி சுற்றிக் கொண்டு பிறக்கும். அல்லது மாலை போட்டுக்கொண்டு பிறக்கும். கொடி சுற்றிக் கொண்டு பிறக்கும் குழந்தை தாயாதிகளுக்கும், மாலை போட்டுக் கொண்டு பிறக்கும் குழந்தை தாய்மாமனுக்கும் ஆகாமல் செய்து விடும என்பது சாஸ்திர விதி. இப்படிப் பட்ட குழந்தைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் முதன் முதலில்பார்க்கும்போது, வெண்கல கிண்ணத்தில் உள்ள நல்லெண்ணெயின் மூலம் பார்த்துப் பரிகாரம் செய்த பிறகு, குழந்தையை நேருக்கு நேராக பார்க்கவோ அல்லது கையில் எடுத்துக் கொஞ்சி விளையாடவோ செய்யலாம் இருப்பினும் தோஷம் தோஷந் த[illegible] அதி[illegible]சந்தேகமில்லை.

சில குழந்தைகள் பிறந்தது முதல் சுமார் ஆறு வயது வரையில், பேசும் திறன் இன்றி.. ஊமையாக இருப்பதுபோல் தோன்றும். ஆனால் குறிப்பிட்ட இந்த வயது கடந்த பிறகு, திக்கித் திக்கி, மெதுவாக பேச ஆரம்பிக்கும். இப்படிப் பட்ட குழந்தைகளின் ஜெனனலக்கினத்திற்கு இரண்டாம் இல்லத்து அதிபதிகிரகமும் அதாவதுவாக்குஸ்தானாதிபதியும், வித்தியாக்காரகனான புதனும், கூடியோ அல்லது தனித்தனியாகவோ, ஜெனனலக்கினத்திற்கு3-6-8-12 இல் மறைந்து இருக்கும்

### அங்கவீனம்

ஒரு குழந்தையின் ஜாதகத்தில், ஜெனன லக்கினத்திற்கு 1-5-9 ஆம் இல்லங்களில் அதாவது திரிகோண ஸ்தானங்களில், கொடிய பாபக் கிரகங்கள் இருந்தால், அந்த ஜாதகர் இயல்பாக அங்கவீனராக இருப்பார் என்றும், அப்படியில்லா விட்டால் குழந்தைப் பேறு இல்லாத குறை உடையவராக இருப்பார் என்றும் சொல்லப்படுகிறது. இந்த இரு குறைபாடும் இல்லாதவர்களுக்கு, விபத்தின் காரணமாக அங்கவீனம் ஏற்படக் கூடும் என்று சொல்லப்படுகிறது.

பிறக்கும் ஒரு பெண் குழந்தையின் ஜெனன ஜாதகத்தில், லக்கினத்திற்கு ஏழாம் இல்லமான சப்தம் ஸ்தானத்தில், சந்திரனும், சுக்கிரனும் கூடி இருந்தால் அப்பெண் வயது கூடிய புருஷனைத்தான் மணக்கக்கூடிய பாக்கியத்தைப் பெறுவாள் என்றோ அல்லது, இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் படுவாள் என்றோ, அவளுடைய ஊழ்வினை அப்படித்தான் என்று நிர்ணயம் செய்யப்பட்டு விடுகிறது.

பெண்ணின் ஜெனன ஜாதகத்தில் அல்லது ருது ஜாதகத்தில், ஜெனனலக்கினம ஜெனனராசி என்று எது எப்படி இருந்தாலும், அந்த ஜாதகத்தில், இது செவ்வாய் என்ற அங்காரகனும், கதிர் என்றும் சொல்லக் கூடிய சூரியனும் கூடி எங்கே இருந்தாலும், அந்தப் பெண்...

**ஏ. எம். பிள்ளை**

## பரமபிதா காட்டிய பாதை

# குறைபாடு உள்ளவர்களை மன நிறைவோடு நோககவேண்டும்

உடலிலே ஊனமுற்றிருப்பது வாழ்விலேஒரு குறைபாடு குறைபாடு உள்ளவர்களை ...

...களால் நாம் பலரின் உள்ளங்களை மனம் நோகச் செய்கின்றோம். அவர்களின் மனித...

...நிலையில் இருக்கும் ஒவ்வொரு உள்ளங்களையும் நாடிச் சென்று அருகிருந்து அவர்கள்...

பதற்கே பொன்னான வாக்கு தானம் செய்யப்படும்- பல வேளைகளில் விற்கப்படும். ஏழ்மையும், இல்லாமையும் விற்பனைக்கு ஏதுவாக அமைந்து விடுகின்றன.

நாடு நாசமாகப் போகாது, காலம் காலமாக கட்டிக் காத்த சுதந்திரம் பறிபோகாமல், அரசியல் வாதிகள் உண்மைஉழைப்பைப் பேணவேண்டும். தியாக மனப்பான்மையுடன் சேவை செய்யமுன் வர வேண்டும். காலத்துக்குக் காலம் பச்சோந்திகளாய்ஸ்த்திரமற்றபோக்கைக் கடைப்பிடிப்பதால் இனத்துக்கு விடிவேற்படாது.

கோடரிக் காம்பாய் இருந்து இன விருட்சத்தைத் தறித்து இடர்ப் படுத்தக் கூடாது. மக்களைக் காலம் காலமாக ஏமாற்றிப் பிழைக்கும் திருவிழாவாக தேர்தல் இடம் பெறக் கூடாது. வருடத்தில் ஒருக்கா ஆயாசம் தீர்க்கும் தண்ணீர்ப்பந்தல்கள் போல் தேர்தல் களத்தில் மதுப் பந்தல்கள் உண்டு. சிந்தனைத் தெளிவற்றசிறுமதியாளர்கள் உண்டுகளித்து விடு தலை வேட்கைக்கு குழி பறிப்பார்கள். இது இந்த விழாக்காலச் சாபக்கேடே

வாக்குரிமை மகத்தானது ஏழை. செல்வந்தன் என்ற ஏற்றமில்லாச் சமநிலை காட்டும் சொத்து. அதனை உரிய முறையில் உரியவர்க்குஅளிக்கவேண்டும். நாட்டின் விடிவிற்கு உந்து சக்தியாய் இருக்க வேண்டும். உண்மையில் உயர்ந்தோரை உவந்து தெரிவு செய்யவேண்டும்.

அன்புடன் ஆசிரியர்

பரமபிதா காட்டிய பாதை

# குறைபாடு உள்ளவர்களை மன நிறைவோடு நோகவேண்டும்

உடலிலே ஊனமுற்றிருப்பது வாழ்விலேஒரு குறைபாடு குறைபாடு உள்ளவர்களை நாம் பார்க்கும் போது பரிதாபப்படுகின்றோம். அவர்களின் செயல்பாட்டைகாணும்போது நாம் மெச்சுகின்றோம். நிறை வாழ்வு கொண்ட நாம் மற்றவர்களின் உள்ளங்களை பல முறை மனம் நோகச் செய்கின்றோம். இன்றையநாளில்இறை வார்த்தை யூடாக இறைமகன் கிறிஸ்து எமக்கு அறிவுறுத்த விரும்புவது யாதெனில் குறைபாடு உள்ளவர்களை நாம் முழு உள்ளத்தோடு ஏற்றுக்கொள்வோமாயின் இறைவன் எமக்கு நிறைவளங்களை தருவார்.

உறுதியாக இருங்கள், அஞ்ச வேண்டாம், பழிதீர்க்க வரும் கடவுள் உங்களுக்கு கைமாறு கொடுப்பார் என்று அறிவுறுத்தப்படுகின்றது. ஏற்றத்தாழ்வுகளால் நாம் பலரின் உள்ளங்களை மனம் நோகச் செய்கின்றோம். அவர்களின் மனித மாண்பினை பேணிக்காக்க விரும்புவதில்லை வெளிவேடத்தை பார்த்து எடைபோடும் நாம் அவர்களின் உள் மனதினை உற்று நோக்க தவறி விடுகின்றோம்.

இவ்வுலகில் தோன்றும் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுக்கு நன்மை செய்யக் கடமைப்பட்டுள்ளான். இறைமகன் கிறிஸ்து எவ்வாறு செவிடனும் திக்கு வாயனுமாகியவனை அணுகிச் சென்று உதவி செய்தாரோ அதேபோன்று இக்கால கட்டத்தில் இயலா



நிலையில் இருக்கும் ஒவ்வொரு உள்ளங்களையும் நாடிச் சென்று அருகிருந்து அவர்கள் கூறும் வார்த்தைகளை பொறுமையோடுகேட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறும் போது இறைமகன் கிறிஸ்துவும் எம் ஒவ்வொருவரையும் நிறைவாக ஆசிர்வதிப்பார். நாம் எதிர்பார்ப்பதற்கு மேலாக நிறைவளங்களை தருவார்.

எனவே நன்மை செய்ய கற்றுக்கொண்ட நாம் தீமைகளை விலக்கி நடக்க இயேசுவிரும்புகிறார். எப்படியெனில்

## அன்ரனி போல்

வீணான பேச்சுக்களால், வதந்திகளை பரப்புவதன் மூலம், இரகசியங்களை அம்பலப்படுத்துவதன் மூலம் மற்றவர்களின் உள்ளங்களை மனம் நோகச் செய்கின்றோம். இதனால் அவர்களை தீயவழிக்குஇட்டுச் செல்ல நாமே காரணமாக இருக்கின்றோம். இதன் மூலம் மற்றவர்களின்உறவை இழந்து இயேசுவின் அன்புறவையும் இழக்கின்றோம்.

உண்மைக்கு சான்றுபகர, மற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட, ஊனமுற்றவர்களுக்கு அருகிருந்து ஆறுதல் மொழி கூற, இயேசுவுக்குசாட்சியான வாழ்வு எம் வாழ்த்து சமுதாயத்தைக்கட்டியெழுப்ப துணிவோமாக,

அல்லது, இரண்டாந்தாரமாக வாழ்க்கைப் படுவாள் என்றோ, அவளுடைய ஊழ்வினை அப்படித்தான் என்று நிர்ணயம் செய்யப்பட்டு விடுகிறது.

பெண்ணின் ஜெனன ஜாதகத்தில் அல்லது ருது ஜாதகத்தில், ஜெனனலக்கினம ஜெனனராசி என்று எது எப்படி இருந்தாலும், அந்த ஜாதகத்தில், இது செவ்வாய் என்ற அங்காரகனும், கதிர் என்றும் சொல்லக் கூடிய சூரியனும் கூடி எங்கே இருந்தாலும், அந்தப் பெண் வாலிப வயதில் விதவையாவாள் என்று சொல்லப்படுகிறது. அவளுக்கு மாங்கல்யபலம்யோகம் தருவதாக இருந்கால், விதவையாவதற்குப் பதிலாக, மாங்கல்யத்தை அடகுக்கடையில் வைப்பதும் அல்லது விற்பதும் பிறகு புதிதாக வாங்கி அணிவதும் என்று இப்படியாகப் பலன்கள் மாறி மாறி நடைபெற்றுக் கொண்டே இருக்கும் இது மாங்கல்ய பாக்யமற்றவள் என்ற அவயோகத்தை ஏற்படுத்தும்.

(சு)

[தொடரும்]

## கப்பலில் சென்ற இளைஞன் கைது

[வவுனியா]

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு கப்பலில் சென்ற இளைஞர் ஒருவர் பஸ்ஸில் செல்லும் பொழுது படையினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

செல்வராசா தயாபரன் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். இவர்கப்பலில் இருந்து இறங்கி பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருக்கும் பொழுதே அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது; (ந)

# வாக்குரிமையற்ற இராசதுரை எப்படி வேட்பாளராக வரமுடியும்?

## முன்னாள் எம். பி. அஸ்வர் கேள்வி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டியிடவுள்ள முன்னாள் அமைச்சர் செல்லையா இராஜதுரைக்கு வாக்குரிமை இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்: பி: அஸ்வர் தெரிவித்துள்ளார்:

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக மலேசியாவில் தங்கியிருக்கும் இராசதுரைக்கு இலங்கையில் வாக்காளராகவோ வேட்பாளராகவோ இருக்கும் உரிமை இல்லையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கும் அஸ்வர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

## ஒலிம்பிக்கில் சுசந்திகாவுக்கு தடைவிதிப்பு

(கொழும்பு)
அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இம்மாதம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்குபற்றுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட சுசந்திகா ஜெயசிங்க, ஸ்ரீஜானி குலவன்ச ஆகியோரின் தெரிவுகள் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமெச்சூர் விளையாட்டுக் கழகத் தலைவர் சுனில் குணவர்த்தன விடுத்த செய்தியில் சுசந்திகாவும் ஸ்ரீஜானியும் இவ்வருட ஒலிம்பிக் போட்டியில் பங்கு பற்றுவது தடை செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்: (ந)

# கூட்டணியின் வேட்பு மனுவுக்கு எதிராக தமிழர் மகாசபை வழக்கு

(கொழும்பு)
அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பு மனுவுக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றில் ஆட்சேபனைமனு ஒன்றுதாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்பாளர் பட்டியலில் செயலாளரின் கையொப்பத்தை உறுதிப்படுத்த வேண்டிய சமாதான நீதிவான் அதற்கு மாறாக முதன்மை வேட்பாளரை உறுதிப்படுத்தியுள்ளதால் அதனைதமிழர்மகாசபையின் சுயேட்சைக்குழுத்தலைவர்திரு கோபாலகிருஷ்ணனால் இவ்வாட்சேபனை மனு தாக்கல் செய்யப்படவுள்ளது. (ந)

## தொலைபேசி மூலம் தேர்தல் பிரசாரம்

(வவுனியா)
வவுனியாவில் தொலைபேசி மூலமாக தேர்தல் பிரசார வேலைகள் நடைபெற்று வருவதாகத் தெரிய வருகின்றது. வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் அபேட்சகர்கள் தொலைபேசியில் வாக்காளர்களுடன் தொடர்பு கொண்டு தமது பிரசார பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியாவில் பெரும்பாலான வீடுகளில் தொலைபேசி இணைப்பு இருப்பதால் அரசியல் வாதிகள் தொலைபேசிப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு சில அபேட்சகர்கள் நடமாட முடியாத நிலை வவுனியாவில் ஏற்பட்டுள்ளதால் தமது பரிதாப நிலையையும் தொலைபேசி வாயிலாக விளக்கி அனுதாப வாக்குகளை பெற முயல்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## 10ஆயிரம் வாக்களிப்பு நிலையம்

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான 10 ஆயிரம் வாக்களிப்புநிலையங்களில் அமைப்பதற்குதேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சகோதரி...

மேலும் தெரிவித்திருப்பதாவது:

கொழும்பு மாநகரசபையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ரணிலுக்குத் தொடர்பு உண்டென சந்திரிகா கூறி வருகின்றார். ஆனால் அக்குண்டுவெடிப்புக்கும் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. ஏனெனில் நாஹும் சந்திரிகாவும் ரணில் விக்கிரமசிங்காவை சிறுபராயம் முதலே நன்கு அறிவோம் என்றுந் தெரிவித்துள்ளார். (வ)

யாழ்ப்பாணத்து...

டத்தை தம்பிராசா மகேஸ்வரன், நாகராசா ராஜகாந்தன், பொன்னையா குணசிங்கம், சோமசுந்தரம் சுந்தரலிங்கம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

தற்போது உண்ணாவிரதிகளின் உடல்நிலை மோசமடைந்துள்ளதாக இவர்களின் உடல் நலனைக் கவனிக்கும் டாக்டர் பிலிப் தெரிவித்துள்ளார்.

இவர்களின் உண்ணா விரதத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் லண்டன் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்திற்கு தமது தொலைநகலை அனுப்பிவைத்தால் அதனை ஜேர்மன் அரசுக்கு அனுப்பி வைப்பதாக மேற்படி ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் அறிவித்துள்ளது. (ந)

தகவல்...

போட்டியிடும் குழுவுக்கு முப்பது நிமிடமும் இரண்டு முதல் பதின்மூன்று தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் குழுவுக்கு அறுபது நிமிடமும், பதினொன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் போட்டியிடும் குழுவுக்கு 90 நிமிடமும் வழங்கப்படும் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் சேனரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை 132க்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடும் கட்சிக்கு 90 நிமிட நேரம் வழங்குவது குறித்து தேர்தல் திணைக்களம் ஆலோசித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-2)

ரணில்...

சிங்க இதற்காக ஏற்படும் 93 ஆயிரம் மில்லியன் ரூபாவை எவ்வழியில் பெறப்போகிறார் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இதேவேளையில் ரணில் விக்கிரம சிங்க தேர்தலில் வென்றால் பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து யுத்த நிறுத்தம் செய்துகொள்ள முடியுமா என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். (வ)

யுத்த விமானங்...

ஊடறுத்து தாழப்பறப்பதனால் யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள நோயாளர்கள் குறிப்பாக இருதய நோயாளிகள் மற்றும் குழந்தைகள்வெகுவாகப் பாதிப்படைந்துள்ளனர்.

குறிப்பாக கடந்த வியாழக்கிழமை யாழ்நகர வான் பிராந்தியத்தில் மிக்ரகுண்டு வீச்சு விமானங்கள் பல தடவைகள் தாழப்பறந்ததனால் அப்பாவி பொதுமக்கள் காயமடைய வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யுத்த விமானங்கள் அடிக்கடி தாழப் பறப்பதனால் அப்பாவிப் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படாது இருக்கவகைசெய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குதாங்கள் உத்தரவிடுவீர்கள் எனஎதிர்பார்க்கின்றோம் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-க)

தேர்தல்...

திருப்பதாவது:

வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும் எமது வேட்பாளர்களுக்கு ஆயுதம் ஏந்தியவர்களினால் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்டோம் என்று ஆயுதங்களுடன் நடமாடும் இவர்களால் சுதந்திரமாக தேர்தல் எப்படி நடைபெறப் போகிறது என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற போலினால், இருதரப்பிலும் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [வ]

போர் விமானங்...

பரப்பும், பீதியும் நிலவியது.

விமான எதிர்ப்புச் சக்தியான இத் திப்பிளம்பினால் யாழ். வேம்படி வீதியிலுள்ள மக்கள் ஜனநாயகப் பேரவையின் தலைமைக் காரியாலயத்தின் கூரைப்பகுதி தீப்பற்றிக் கொண்டதுடன் இக்கட்டடத்தின் அருகேயிருந்த மதில் சுவர்களும் பலத்த சேதத்துக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சனநடமாட்டம் கூடிய பகுதியில் கண்மூடித்தனமாக விமான எதிர்ப்பு பீரங்கிக் குண்டுகள் ஹெலியில் இருந்து வீசப்பட்டபோது அவை மார்பு நோய்ச் சிகிச்சைப்பிரிவு இயங்கும் பகுதியை அண்டி வீழ்ந்தன.

இதனால் அப்பகுதி புகை மண்டலமாகக் காட்சியளித்தது. மக்களைக் கிலிகொள்ள வைத்த இத்தாக்குதல் சம்பவங்களால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லையாயினும், உளவியல் ரீதியான தாக்கங்களை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய விமானத்தாக்குதல்கள் கடந்த சில தினங்களாக தினமும் மூன்று வேளைகளில் இடம்பெற்று வருவதை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஒருதொகுதி நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

இத்தகைய குண்டுத் தாக்குதல்கள் தொடரும் பட்சத்தில் மக்கள் தம் அன்றாடத் தேவைகளைத் தீர்ப்பதற்கு யாழ் நகர் வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம் எனவும தெரியவருகிறது. (வ-12-3)

சிறைக்...

தேர்தல் ஆணையாளரைச் சந்தித்த அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு வாக்களிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றுகேட்டுக் கொண்டதையடுத்தே தேர்தல்ஆணையாளர்மேற்கண்டவாறு இதனை அறிவித்துள்ளார்.

சிறைக்கைதிகள் வாக்களிப்பது தொடர்பாக அவர் மேலும்கருத்துத் தெரிவிக்கையில்:

தேர்தல் சட்டத்தின் கீழ் வாக்களிக்கும் உரிமை கைதிகளுக்கு இல்லை எனவும் சிறைச் சாலைகளில் பரீட்சைகள் எழுதுவதற்குமட்டும் அவர்கள் அனுமதிக்கப்படலாமென்றும் தெரிவித்துள்ளார். (வ)


## பாராட்டி வரவேற்கின்றோம்

பச்சிலைப்பள்ளி முன்னாள் உதவி அரசாங்க அதிபரும் தற்போதைய கிளிநொச்சி மாவட்ட அதிபராகவும் கடமையாற்றும்

**உயர்திரு இ. ஐயாத்துரை**


அவர்கள் யாழ் மாவட்டத்தில் இடம்பெயர்ந்திருக்கும் பச்சிலைப்பள்ளி மக்களை சந்திப்பதற்கு நாளை திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு புலோலியில் இயங்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்கு வருகைதரவுள்ளார். அரசாங்க அதிபரை பச்சிலைப்பள்ளி மக்கள் மகிழ்ச்சியுடன் பாராட்டி வரவேற்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அலுவலர்களும்
பச்சிலைப்பள்ளி,
பளை.

[1717]

தமிழ் பேசும் மக்களின்
உரிமைக்கு குரல் கொடுப்போம்!
உறவுக்கு கரம் கொடுப்போம்!!
தமிழ் பேசும் தேசத்தை மீளக்
கட்டியெழுப்பிட
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு
எமது வாக்குகளை அளித்திடுவோம்!

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!



(ஈ. பி. டி. பி)

யாழ்குடாநாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக காணாமல் போனவர்களினது பிரச்சினைக்குத் தீர்வுகாண, காணாமற் போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர் சங்கம், ஈ. பி. டி. பி. யின் ஏற்பாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அச் கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.